**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

**1. கொடுக்கல் வாங்கல் அறிக்கை**

2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 பெப்ரவரி 18 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**2. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களுக்குள் அமைந்துள்ள அசைவுறாத ஆதனங்கள் தொடர்பாக புதிதாக இனங்காணப்பட்ட ஆதன வரி வலையங்களில் இருந்து ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக உள்ளடக்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொதுக்கூட்டத்திற்கு சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 154 ஆம் பிரிவு | 1,522,191 | 2019 ஆம் ஆண்டில் 04 காணி விற்பனைகளில் இருந்து அந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சதவீத வரி அறவிடப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிக்காக தவணை செலுத்தப்படுகின்றமையினால் உரித்துறுதி சகல பணமும் செலுத்தப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியில் ஒரு சதவீத வரி அறவிடப்பட்டு வேறுபாடு ஏற்படுமாயின்<br><br>பின்னர் அந்த சொத்துக்களை விற்பனை செய்த நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | 160 ஆம் பிரிவு | | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பந்தியினை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை. | | ஆதன வரிகளின் கீழ் வருகின்ற ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், கொவிட் தொற்று நோயினால் அதனை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என<br><br>அறியத்தருகின்றோம். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சகல காணி கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான நிர்வாகம்

#### 3.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 பெப்ரவரி 15 முதல் 2018 திசெம்பர் 31 வரை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு 47 மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,965,000 | 7,432,006 | 7,961,950 | 763,470 | 5,119,625 | 5,385,655 | 4,358,182 | 1,303,224 |
| (ii) | வாடகை | 2,224,000 | 3,855,391 | 3,741,038 | 148,043 | 2,372,125 | 1,578,887 | 1,506,539 | 72,348 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 401,000 | 410,000 | 410,000 | - | 236,250 | 532,200 | 532,200 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 93,649,000 | - | 46,653,125 | 46,995,875 | 46,064,375 | - | 30,832,444 | 15,231,931 |
| | | 102,239,000 | 11,697,397 | 58,766,113 | 47,907,388 | 53,792.375 | 7,496,742 | 37,229,365 | 16,607,503 |

#### 3.1.2 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 36,666,700 ஆகும். | அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு கிடைப்பதற்குள்ள தொகை ரூபா 131,047,610 ஆகும் என அறியத்தருகின்றோம். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதி | | |
| | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 04 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை விதிப்பதற்கு எடுக்கப்பட வேண்டும். | ஆயுர் வேத நிலையத்தின் வரைவினை செய்வதற்குரிய உப விதி விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| | 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03(ஆ) பிரிவின் பிரகாரம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. பௌதீக திட்டத்தில் வீதிகள், காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக ரூபா 7.8 மில்லியன் நிதி ஏற்பாடு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| | 2019 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 21,793,371 கிரயமொன்று செய்யப்பட்டிருந்ததுடன், அந்த செலவினங்களை குறைப்பதற்காக கழிவுப் பொருள் வரி விதித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப விதியொன்று விதிக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் கிரயங்களை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன், உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | செலவினங்களை குறைப்பதற்காக கழிவுப் பொருள் சந்தை, கால் நடை உணவுகள் விற்பனை மற்றும் மீள்சுழற்சி போன்ற கிரயங்கள் மேவுகை செய்யப்படுகின்றன என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை | நிலைபேறான அபிவிருத்தி நோக்க திட்டம் காணப்படாத |

| | | |
|---|---|---|
| போது நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்து அதில் 15 நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2020 ஆம் ஆண்டு வரை திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், சபையின் பாதீட்டு தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையாகக் கொண்டு பாதீட்டில் நிதி ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். | போதிலும், அதிகாரச் சட்டத்தின் பணிகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கும் உடன்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். |

**4.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இரண்டாம் நிலையில் 05 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 10 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவி என்பவற்றில் மிகையும் காணப்பட்டன. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். |

**4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஞாயிறு வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கல் | | |
| உடன்படிக்கையின் 07 ஆவது பிரிவின் பிரகாரம் சுற்றாடலுக்குரிய மாதாந்த நீர் மற்றும் மின்சார பட்டியல்கள் செலுத்தும் வாடகையாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2019 ஆகஸ்ட் முதல் திசெம்பர் மாதம் வரை வாராந்த சந்தையின் நீர் பட்டியல்களை தீர்ப்பதற்காக ரூபா 162,911 தொகையும், மின்சார பட்டியல்களை தீர்ப்பதற்காக ரூபா 10,167 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரிவின் பிரகாரம் வாடகையாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீடு ஒன்றை தயாரித்து அதனை வாடகையாளின் வைப்புப் பணத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வாகனப் பயன்பாடு<br>---------------------------------- | | |
| சபைக்குச் சொந்தமான 06 மோட்டார் சைக்களில்களில் 05 மோட்டார் சைக்கிள்கள் சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கான எரிபொருள் சபையினால் விநியோகிக்கப்படாத போதும், அதற்கான பழுதுபார்த்தல்கள், சேவை நடவடிக்கைகள், வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ்களை பெறுவதற்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. மேலும், இந்த மோட்டார் சைக்கிள்கள் கடமை நேரத்தின் பின்னர் சபையில் நிறுத்தி வைக்கப்படாமல் அவர்களின் தனிப்பட்ட பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக சபையில் நிறுத்தி வைத்தல் வேண்டும். | சபையில் நிறுத்தி வைப்பதற்காக ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) ஹைகம, கொத்தலாவல, கந்த பஹல, மீகஹவத்தே இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல் நோக்கு கட்டிடம்.<br>------------------------------------------------------------- | | |
| இரண்டு மாடிகளை உடைய இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், நீர் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் கூரையில் முகடு கட்டப்படாமையின் காரணமாக மேற்கூறப்பட்ட கூரையில் மழை நீர் விழுவதனால் அழிவடைந்திருந்திருந்ததுடன், கூரையின் பலகைகளும் மழை நீரில் நனைந்தமையினால் குறுகிய காலத்தில் உக்கும் அவதானமொன்று காணப்பட்டது. கட்டிடத்தின் சாவி சபையிடம் காணப்படாமையின் காரணமாக திறந்து வைப்பதற்கு முடியாதிருந்ததுடன், கட்டிடத்தின் நிலம் புல் வளர்ந்து காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 289,190 செலவில் பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு தேவையான வசதிகளை வழங்கி பயன்படுத்துதல் வேண்டும். | தற்போது இந்த கட்டிடத்தின் பயன்படுத்தப்படுவதுடன், வேலைகளை பூர்த்தி செய்து சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) நூலக புத்தகங்கள் தொலைந்தமை

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்குரிய மெய்மெய்யாய்வின் போது ஞான பிரதீப நூலகத்தில் காணாமல்போன ரூபா 76,785 தொகையான 438 புத்தகங்களின் பெறுமதியை பதிவழிப்பதற்கு சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும், அந்த புத்தகங்கள் காணமல் போனமை தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த நபரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நூலகத்தில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக பொருட்பதிவேடும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனையொன்றை நடத்தி பொறுப்பு வாய்ந்தவர் இனங்காணப்பட வேண்டும். அதற்காக பொருட்பதிவேடுகள் பேணிச் செல்லப்பட வேண்டும். | இதற்காக விசாரணையொன்று மேற் கொள்ளப்பட்டதுடன் பொருட் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 14 சந்தர்ப்பங்களின் போது தாமதமாகி முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருந்ததுடன், 2019 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 4,094,661 தொகை தீர்க்கப்படாத முற்பண மீதியாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய ஆண்டில் தீர்க்கப்படாத முற்பணத்திற்கான பட்டோலைகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டும். | வாகன முற்பணம் தொடர்பாக வாகனத்திற்கு வாகனம் பெறப்பட்டிருந்ததுடன் முறையான செலவினம் மற்றும் உபசரிப்பு செலவின முற்பணங்கள் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களுக்காக வழங்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்கள் வழங்கப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு முன் மீண்டும் முற்பணம் வழங்கப்பட முடியாது. | வாகனங்களுக்கு வழங்கப்படுகின்ற முற்பணங்களைப் பெற்று பழுதுபார்க்கப்படுகின்றமையினால் ஒரு முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முன் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 4.5 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் 25 மயான நிலங்கள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்ட போதிலும், அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு எல்லையினை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்கும் மயான நிலங்களை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களை அளந்து எல்லைகளை இனங்கண்டு எல்லை வேலிகளை நிர்மாணிப்பதற்கும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மயான நிலங்களை அளவிட்டு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 25 காணிகள் (04 ஏக்கர் 03 ரூட் 30 பேர்ச்) எந்தவொரு பணிகளிலும் ஈடுபடுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான காணிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மர வளர்ப்பு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |